# சமூக விஞ்ஞான கற்கை வட்டம்



செய்திமடல் - 70 | 27-09-2012

13-09-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : புற்றுநோயும் அதற்கான சிகிச்சை முறைகளும்.**

**தொடக்க உரையாடல் : லோ. தசாந்தன்**

புற்றுநோய் என்பது அசாதாரணமான(abnormal) கலங்களின் அபரிமிதமான பெருக்கம் ஆகும். அக்கலங்களின் கட்டமைப்பு தொழிற்பாடு என்பவை முற்றிலும் வேறுபட்டதாக அமைந்திருக்கும்.

கலவட்டத்தின்போது Oncogenes, Tumor suppression genes என்பவை புற்றுநோய் கலங்களின் உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன. தூண்டல் கிடைக்கும்பட்சத்தில் Oncogenes புற்றுநோய்க்கலங்களை உருவாக்கும் அதேவேளை Tumor suppression genes அவற்றைக்கட்டுப்படுத்துவனவாக தொழிற்படுகின்றன.

ஆனாலும் mutated Tumor suppression genes புற்றுநோய்க்கலங்களின் பெருக்கத்தை அனுமதிக்கின்றன.

இவற்றின் தொழிற்பாட்டில்
1.பரம்பரைக்காரணிகள்
2. சூழலியல் காரணிகள்(Carcinogenic agents)
3. Idiopathic factors என்பவை
செல்வாக்குச்செலுத்துகின்றன.

பெண்களில் பொதுவான புற்றுநோய்களாக மார்பகப்புற்றுநோய், கருப்பை,சூலகப்புற்றுநோய் என்பனவும் ஆண்களில் நுரையீரல் புற்றுநோய், வாய் தொண்டை சார்ந்த புற்றுநோய், prostate cancer என்பனவும் காணப்படுகின்றன.

மார்பகப்புற்றுநோயின் காரணிகள் வருமாறு:
1.பரம்பரைக்காரணிகள் - தாய் வழியில் கடத்தப்படும்..
2.Hormonal factors :
-முற்கூட்டிய மாதவிடாய் ஆரம்பம்
-பிந்திய மாதவிடாய் நிறுத்தம்
-குழந்தையின்மை
-பிந்திய வயதில் குழந்தை பெறல்
-கருத்தடை மாத்திரைகள்
-Hormone replacement therapy

3.வாழ்க்கை மற்றும் உணவு முறைகள் - அதிக கொழுப்பு, குறைந்த நார்ப்பொருட்கள்

4.கதிர்வீச்சு

> சாதரணமாக குறித்த கால இடைவெளிகளில் புற்றுநோய்க்கான பரிசோதனைகளை செய்துகொள்வது சிறந்தது. பரம்பரைக்காரணிகள் (Family history) உள்ளவர்கள் இதில் கூடிய கவனம் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.
>
> குணப்படுத்துவதை விட, நோய் வராமல் தடுப்பதே சிறந்ததாகும்.

நுரையீரல் புற்றுநோயின் காரணிகள் :

1.புகைப்பிடித்தல்-80 சதவீதமான புற்றுநோயின் காரணி
2.தொழில்சார் சூழலியல் காரணிகள்
3.கதிர்வீச்சு
4.உணவுப்பழக்கவழக்கங்கள்

வாய் மற்றும் தொண்டை சம்பந்தமான புற்றுநோய்களுக்கு புகைப்பிடித்தல், வெற்றிலை போடுதல் என்பன பிரதான காரணிகளாகும். மலையக தோட்டத்தொழிலாளர்களிடையே இவ்வகையான புற்றுநோய் அதிகமாக காணப்படுகிறது.

புற்றுநோயின் அறிகுறிகள் அதன் அமைவிடத்தைப்பொறுத்து காணப்படுகின்றது. உடல் மேற்பரப்புக்கு அண்மையில் புற்றுநோய் காணப்படுமாயின் அறிகுறிகள் விரைவாகத் தென்படும்.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**9/11 மூலம் உலக ஒழுங்கை விளங்கிக்கொள்ளல்**

திறந்த கலந்துரையாடல் | 27-09-2012



ராஜினி திராணகம

ராஜினி திராணகம அல்லது ராஜினி ராஜசிங்கம் திராணகம (பெப்ரவரி 23, 1954-செப்டம்பர் 21, 1989) இலங்கையில் இருந்த மனித உரிமை செயற்பாட்டாளரும் பெண் உரிமை செயற்பாட்டாளரும் ஆவார்.

1980 இல் ராஜினி போர் நிறைந்த நிலமான யாழ்ப்பாணம் திரும்பி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவப் புலத்தில் உடற் கூறியல் விரிவுரையாளராக இணைந்தார்.

கணித விரிவுரையாளராக பணியாற்றிய ராஜன் ஹூலுடனும், சிறிதரன், தயா சோமசுந்தரம் என்பவர்களுடன் இணைந்து 1990 இல் வெளியிடப்பட்ட முறிந்த பனை (The Broken Palmyra) என்ற ஆங்கில நூலை எழுதினார். இந்நூல் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் பற்றிய விமர்சனங்களைக் கொண்டிருந்தது. இவர்கள் நால்வரும் இணைந்து 1988 இல் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை தொடங்கினர்.

செப்டம்பர் 21, 1989 அன்று பணியில் இருந்து வீடு திரும்பும் வழியில் அடையாளம் தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## புற்றுநோயும் அதற்கான சிகிச்சை முறைகளும்

முன்பக்கத் தொடர்ச்சி..

ஆனால் உடலின் ஆழத்தில் அது காணப்படுமாயின், அளவில் பெரிதாகி ஏனைய பகுதிகளின் தொழிற்பாடு பாதிக்கப்படும்போது அல்லது தற்செயலான மருத்துவ பரிசோதனையின்போது மட்டுமே அதனை கண்டுபிடிக்ககூடியதாக இருக்கும்.

புற்றுநோய்க்கலங்கள் நேரடியாக, சுற்றோட்டத்தொகுதியூடாக அல்லது நிணநீர்த்தொகுதியூடாக பரவலடைகின்றன. சத்திரசிகிச்சையின்போது புற்றுநோய்க்கலங்களுடன் சேர்த்து நிணநீர் முடிச்சுக்களும் அகற்றப்படுவதற்கான காரணம் இதுவே.

பிரதான சிகிச்சை முறைகளாக சத்திரசிகிச்சை, Chemotherapy, கதிர்சிகிச்சை (Radiotherapy) என்பன அமைகின்றன. சத்திரசிகிச்சை மூலம் புற்றுநோய்க்கலங்களை அகற்றிவிடுதல் அடிப்படை சிகிச்சை முறையாகும். ஆனாலும் அதன்மூலம் புற்றுநோய்க்கலங்களை முற்றாக அகற்றிவிட முடியாத காரணத்தால் Chemotherapy, Radiotherapy என்பவை மூலம் அவை தொடர்ச்சியாக அழிக்கப்படுகின்றன.

Chemotherapy, Radiotherapy போன்ற சிகிச்சை முறைகளில் பக்கவிளைவுகள் தவிர்க்க முடியாதவை. ஆனாலும் அவற்றை கட்டுப்படுத்தமுடியும். நவீன முறையிலான சிகிச்சை முறைகளினால் மிகக்குறைந்த பக்கவிளைவுகளையும் அதிகூடியளவிலான சிகிச்சை பெறுபேறுகளையும் பெற்றுக்கொள்ள முடியும். எமது நாட்டைப்பொருத்தளவில் மிகக்குறைந்தளவிலேயே நவீன சிகிச்சை முறைகள் காணப்படுகின்றன.

சாதரணமாக குறித்த கால இடைவெளிகளில் புற்றுநோய்க்கான பரிசோதனைகளை செய்துகொள்வது சிறந்தது. பரம்பரைக்காரணிகள் (Family history) உள்ளவர்கள் இதில் கூடிய கவனம் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

குணப்படுத்துவதை விட, நோய் வராமல் தடுப்பதே சிறந்ததாகும்.







## வலை

### காப்புரிமை அநீதியால் காணமல் போகும் கண்டுபிடிப்புகள்!

தொழில்நுட்பமும், அதன் வளர்ச்சியும், முழுவீச்சுடன் சுதந்திரமாக முன்னேறிச் செல்லவில்லை, இன்றைய காப்புரிமை சட்டங்கள் புதிய தொழில் நுட்ப வளர்ச்சியை தடை செய்கின்றன என்கின்றது ஒரு முதலாளித்துவ பொருளாதார ஆய்வு

இலகு முகவரி : **valai.thulaa.net/78**

http://www.vinavu.com/2012/09/25/copyright-woes/

### சிங்கள மாணவர்கள், பயணிகள் மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

தமிழ்நாட்டில் சிங்களப் பயணிகள், மாணவர்கள் மீது நடத்தப்பட்ட இனவாதத் தாக்குதலைக் கண்டித்து NDMLP வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை.

இலகு முகவரி : **valai.thulaa.net/79**

http://thulaa.net/home/archives/514

### அணுமின்பிறப்பாக்கிகளும் அவலங்களும்.

அணுமின்சாரம் தொடர்பான அறிவியல் விளக்கங்களையும் அணுமின்வலுவினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் பற்றிய விரிவான அறிவியல் கண்ணோட்டத்தினையும் அரசியல் ரீதியான அணுகுமுறையுடன் விளக்குகிறது இக்கட்டுரை

இலகு முகவரி : **valai.thulaa.net/80**

http://ndpfront.com/tamil/index.php/publications/munnaneeissues/issue-5/1405-2012-09-10-21-56-21

### அப்துல் கலாம் - கட்டுடைக்கப்பட வேண்டிய பிம்பம்

சமூகpபெரும்பான்மையோரால் பிம்பம்கொடுத்து உருவாக்கப்படும் அறிவுஜீவிகள் அறிவுசார் நேர்மையுள்ளவர்களாக இருக்க சாத்தியமில்லை. இந்நிலையில் நம்முன் உள்ள பெரும்பணி, இத்தகையோரின் பிம்பங்களை கட்டுடைப்பதேயாகும்.

**http://valai.thulaa.net/81**

http://www.keetru.com/index.php?option=com_content&view=article&id=21310

### 9/11 மூலம் உலக ஒழுங்கை விளங்கிக்கொள்ளல்

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

"விளையாட்டுச் சீட்டுகள் எல்லாவற்றையும் தன்னிடமே வைத்துக்கொண்டு விளையாட நினைக்கும் ஒருவனிடம், மறுதரப்பானது விதிகளை மாற்றி விளையாட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறது.

அந்த விதிகளை மாற்றி விளையாட வேண்டிய கட்டாயத்திலும் கூட நியாயமான விதிகளை மாற்றி விளையாட முடியாத நிலவரத்தில் நியாயமில்லாத விதிகளைப் பின்பற்றவேண்டிய நிலைக்கு மாற்றுத்தரப்பு தள்ளப்படுகிறது".

- பியே போர்த்தியோ (Pierre Bourdieu)

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

CC BY NC SA